




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், (15.11.2024) நேற்று முன்தினம் மாலை, பெரம்பலூரில் நடைபெற்ற ‘அரியலூர் – பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் சந்திப்பு’ நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2024) அரியலூர் விருந்தினர் மாளிகையில், கழகத்தின் அரியலூர் மாவட்ட தெற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பாளர் திருமதி திவ்யா வீரமணி தம்பதியரின் ஆண் குழந்தைக்கு “திராவிடச் செல்வன் என்று பெயர் சூட்டி, வாழ்த்தினார். அரியலூர் மாவட்ட கழகச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ். சிவசங்கர், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலச் செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2024) அரியலூர் விருந்தினர் மாளிகையில், அரியலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் குலோதுங்கன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அரியலூர் மாவட்ட கழகச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ். சிவசங்கர், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலச் செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

### மதுரவாயல் – காஞ்சிபுரம்

# சுங்கச்சாவடிகளின் வருவாயை சாலை மேம்பாட்டுக்கு பயன்படுத்துக!

## ஒன்றிய அரசிற்கு கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் வலியுறுத்தல்!

**சென்னை, நவ.17-**

**சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், நிதியினை உயர்த்தி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்தியும் ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களுக்கு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி. கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.**



அதன் விவரங்கள் பின்வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மற்றும் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் சீரமைப்புப் பணிகளுக்கான நிதியை உயர்த்தி ஒதுக்கீடு செய்யக் கோரி உங்களது கவனத்தை ஈர்க்க இக்கடிதத்தை எழுதுகிறேன். சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையின் அவல நிலை குறித்தும், உடனடி சீரமைப்புப் பணிகளுக்கான தேவை குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே ஒன்றிய அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மேலும் நான் உள்பட பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் பல்வேறு தருணங்களில் இது குறித்து கவனம் ஈர்த்துள்ளோம். இருப்பினும் சென்னை பெங்களூர் நெடுஞ்சாலையில், மதுரவாயல் காஞ்சிபுரம் இடையே உள்ள 60 கி.மீ. தூரச் சாலையினைச் சீரமைக்கும் வகையிலும், பாதுகாப்பை மேம்படுத்தும் வகையிலும் மிகச் சொற்பத் தொகையை மட்டுமே ஒன்றிய அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்தச் சாலையானது, தென்னிந்தியாவின் மிகவும் முக்கியமான போக்குவரத்து வழியாக உள்ளபோதும், போதுமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருவதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. கடந்த 2020ஆம் ஆண்டு இந்த நெடுஞ்சாலையின் சீரமைப்பை தொடங்குவதாக ஒன்றிய அரசு அறிவித்தது. அறிவித்து நான்கு ஆண்டுகள் ஆகிய நிலையிலும் இந்த நெடுஞ்சாலை இன்னும் மோசமான நிலையிலேயேதான் உள்ளது. அப்படிப்பட்ட சூழலில், இந்த சாலையின் சீரமைப்பிற்கு தற்போது வெறும் 8 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இது மிகவும் குறைவான நிதி.

இந்நிலையானது முறையான பராமரிப்பும், சரியான முதலீடும் இல்லாததையே உணர்த்துவதோடு, ஓட்டுநர்களையும் ஆபத்தான நிலைமைகளுக்கு உள்ளாக்குகிறது. அதிலும் குறிப்பாக சாலை விரிவாக்கப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுவருவதால், ஓட்டுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் முறையான தடுப்புகள் (Barricades), பிரதிபலிக்கும் குறிப்பான்கள் (Reflective Markers) மற்றும் விளக்குகள் போன்ற அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளும் மேற்கொள்ளவில்லை. சாலையில் குழிகள், மங்கலான விளக்குகள், முன்னறிவிப்பில்லாத திசைதிருப்புதல் போன்ற நடவடிக்கைகள் தொடர் விபத்துகளை ஏற்படுத்தவதோடு வாகன ஓட்டிகளுக்கு சிரமத்தையும் அளிக்கிறது.

ஸ்ரீபெரும்புதூர் மற்றும் காஞ்சிபுரம் சுங்கச் சாவடிகளிலிருந்து மட்டும் ஆண்டுக்கு 140 கோடி ரூபாய் வருவாய் வரும் சூழலில், அந்தத் தொகை சாலைகளின் பராமரிப்புக்கோ, மேம்பாட்டிற்கோ முறையாக பயன்படுத்தப்படுவதில்லை. இதுபோன்ற செயல்களினால் தமிழ்நாட்டில் உள்ள சாலைகளின் பாதுகாப்பு மற்றும் பயணிகளின் பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்மீது மக்களுக்குள்ள நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது.

ஆறுவழிச் சாலை விரிவாக்கம் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பல ஆண்டு கால தாமதமே, சிறப்பான திட்ட மேலாண்மை தேவை என்பதை உணர்த்துகிறது. இந்தத் தாமதங்கள் ஏற்கனவே சென்னை பெங்களூரு விரைவுச்சாலையில் பின்னடைவுகளை ஏற்படுத்தியதோடு தற்போதுள்ள நெடுஞ்சாலையின் முக்கியமான பகுதிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த நெடுஞ்சாலையின் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பின்வரும் நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும்:

1. போதுமான நிதி வழங்குதல் : சீரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 8 கோடி நிதி மிகவும் குறைவானது. இந்தச் சுங்கச் சாவடிகள் அதிக வருவாயை ஈட்டுவதால், அதனை முறையாக மறுமுதலீடு செய்து, சிறந்த மின்விளக்குகள், சாலை அமைத்தல், பிரதிபலிப்பு குறிப்பான்கள் (Reflective Markers) பொருத்துதல், பாதுகாப்பு தடுப்புகள் (Barricades) நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. திட்டப்பணிகளை வெளிப்படைத்தன்மையோடு விரைந்து முடித்தல் : ஆறுவழிச்சாலை விரிவாக்கத்தில் ஏற்பட்டுள்ள அளவுகடந்த கால தாமதமும் மெத்தனப்போக்கும் ஏற்கனவே சாலைப் பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் சமரசம் செய்துள்ளது. எனவே இந்தத் திட்டப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படுவதையும், இனி ஏற்படும் தாமதங்களுக்கான பொறுப்பையும், ஒன்றிய அரசே ஏற்க வேண்டும்.

3. சுங்கச் சாவடி வருவாயில் வெளிப்படைத் தன்மை : சுங்கச் சாவடி வருவாயை முறையாக சாலை மேம்பாட்டிற்கும், பாதுகாப்புக்கும்தான் பயன்படுத்தப்படு கிறது என்பதை வெளிப்படைத்தன்மையோடு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும், அதில் கணிசமானத் தொகையினை அதிகப் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் பகுதிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த பயன்படுத்தப்படுவதையும் ஒன்றிய அமைச்சகம் உறுதி செய்ய வேண்டும்.

4. உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் : போதுமான விளக்குகள் மற்றும் சாலைத் தடுப்புகள் போன்ற அடிப்படை வசதிகளின் பற்றாக் குறையைச் சரிசெய்வதோடு, இரவு நேரப் பயணிகளுக்கு வசதியாக Highmast lamps, ரப்பர் வேகத்தடைகள் மற்றும் பிரதிபலிப்புக் குறிப்பான்கள் உள்ளிட்டவற்றை நிறுவி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள கருத்துகளை கவனத்தில்கொண்டு, இந்த முக்கிய வழித்தடத்தின் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த தேவையான நிதியினை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்வதோடு, தமிழ்நாட்டு மக்களும், சென்னை பெங்களூரு நெடுஞ்சாலை பயணிகளும், விபத்தற்ற, பாதுகாப்பான, தரமான சாலைப் பயணம் மேற்கொள்வதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்.

இந்தப் பிரச்னையின் தீவிரத்தன்மையை உணர்ந்து, இந்தச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதை அமைச்சகம் உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பெரம்பலூர் மாவட்டம், கிருஷ்ணாபுரம், பூலாம்பாடி, கள்ளப்பட்டி சாலை இடை வழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள சாலையின் தரம் குறித்து திடீர் ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட ஆட்சியர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், நெடுஞ்சாலைத்துறை தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் சந்திரசேகர், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சத்திய பிரகாஷ், கண்காணிப்பு பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) விழுப்புரம் செந்தில்குமார், செந்தில், கலைவாணி, திருவருள், பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், சன்.சம்பத், எஸ்.நல்லதம்பி, க.ராமலிங்கம் மற்றும் எஸ்.அழகுவேல்,ரா.சிவா ஆகியோர் உடனிருந்தனர்.

### 2024-25ஆம் ஆண்டிற்கான 9 தமிழறிஞர்களின்

# நூல்கள் நாட்டுடைமை செய்து ரூ.90 லட்சம் நூலுரிமைத் தொகை!

## தமிழ் வளர்ச்சி- செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்குகிறார்!

சென்னை, நவ.17-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் 2024-25ஆம் ஆண்டிற்கு 9 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகை (ரூபாய் 90.00 இலட்சம்) வழங்கப்படவுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 179 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 14.42 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 140 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நாளிதுவரை 22 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.2.85 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 2024-25-ஆம் ஆண்டில் இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும் ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் வாழும் தமிழறிஞர்களான முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (27 நூல்கள்) நாட்டுடைமையாக்கி ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும் மற்றும் மறைந்த தமிழறிஞர்களான முனைவர் சோ.சத்தியசீலன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தனபாக்கியம் சத்தியசீலன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும்,

முனைவர் மா.ரா.அரசு அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (7 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி அ.திரிபுரசுந்தரி அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், பாவலர் ச.பாலசுந்தரம் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (29 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையர்களான பா.மதிவாணன், திருமதி பா.தமிழ்மணி ஆகிய இருவருக்கும் சேர்த்து ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் க.ப.அறவாணன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (136 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் க.த.திருநாவுக்கரசு அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (34 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையர்களான தி.அம்பல வாணன், திருமதி தி.அவ்வை, திருமதி தி.பூங்கோதை ஆகிய மூவருக்கும் சேர்த்து ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் இரா.குமரவேலன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (8 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தமிழரசி குமரவேலன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், கவிஞர் கா.வேழவேந்தன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி பானுமதி வேழவேந்தன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும் என மொத்தம் ரூ.90.00 இலட்சத்திற்கான காசோலைகள் நாளை (18.11.2024 - திங்கள் கிழமை) காலை 11.00 மணியளவில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

### பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு

# இலவச அறுவை சிகிச்சை செய்ய சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி !



**சென்னை, நவ.17-**

**கண் அழுத்த நோய் உள்ளிட்ட பார்வைத்திறன் குறைபாடுள்ள ஏழைகளுக்கு இலவச அறுவை சிகிச்சை செய்வதற்காக சன் டி.வி. ரூ.75 லட்சம் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.**

அதன் ஒரு பகுதியாக, பார்வை திறன் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள சென்னை அகர்வால் கண் மருத்துவமனைக்கு சன் டி.வி. 75 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை அகர்வால் கண் மருத்துவமனை நிர்வாகிகள் டாக்டர்கள் சவுந்தரி, சுதா, திரிவேணி ஆகியோரிடம் சன் டி.வி. சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் வழங்கினர். இந்த நிதியின் மூலம் ஏழைகளுக்கு இலவச சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்று அகர்வால் கண் மருத்துவமனை மண்டல மருத்துவ இயக்குனர் டாக்டர் சவுந்தரி தெரிவித்தார். ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும், சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

சன் டி.வி. மற்றும் சன் பவுண்டேஷன் இதுவரை அளித்த நிதி உதவிகள் மூலம் அகர்வால் கண் மருத்துவமனையில் 8,603 பேருக்கு இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.